*நோபல் லாரேட்*

# மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்

(துணை அமைப்பு)

# அன்னை தெரசா பேரவை

**அன்னை தெரசா அவர்கள் சமுதாயத்தில் நலிந்தவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள், ஆதரவற்றவர்கள், விதவைகள் என அடிதட்டு மக்களுக்காக தன்னை அர்பணித்து, அவர்களிடம் அன்புகாட்டி, அவர்களை அரவணைத்து ஆதரவுகரம் நீட்டியவர்கள். அவர் ஏழைகளின் ஏந்தலாகவும், எளிமையின் சிகரமாகவும் வாழ்ந்து கட்டியவர். அவர் உலகம் போற்றும் உத்தமியாக, அன்பின் அடையாளமாக, அனைவரையும் அரவணைக்கும் தாயாகத் திகழ்ந்தவர்.**

**அன்னை தெரசா அவர்கள் இப்பூ உலகத்தைவிட்டு விலகிய 1997, செப்டம்பர் 5-ம் நாள், கல்கத்தா நகரில் அவர் இறுதி ஊர்வலத்தில் கூடிய லட்சகணக்கான மக்களின் உணர்ச்சி ததும்பிய உள்ளக்குமுறலின் வெளிப்பாடுதான் "மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்" ஆரம்பிக்கப்பட்டதற்கு ஒரு உந்துகோலாக அமைந்தது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், இன்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், தன்னர்வ தொண்டர்களால் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், அடித்தட்டு மக்கள், ஏழைகள், எளியோர், குழந்தைகள், முதியோர்கள், விதவைகள், மாணவர்கள், நோயாளிகள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டி அவர்கள் வாழ்வில் விளக்கேற்றி வைக்க பாடுபடுகிறது.**

## அன்னை தெரசா பேரவை: (Mother Teresa Forum)

**மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் (Mother Teresa Charitable Trust)-ன் துணை அமைப்பான அன்னை தெரசா பேரவை, ஜாதி, மதம், மொழி, இன பாகுபாடற்ற தன்னார்வ தொண்டர்களை உள்ளடக்கிய ஒரு அமைப்பு. பொதுச்சேவையில் ஆர்வமுள்ள ஆண்/பெண் இருபாலரும் இதில் உறுப்பினராக சேரலாம். இதில் உறுப்பினராவதற்கு எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. இந்திய எல்லைக்கு உட்பட்ட தாங்கள் வசிக்கும் எந்த பகுதியில் வேண்டுமென்றாலும் உறுப்பினராக சேர்ந்து இதன் கிளையை ஆரம்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் இதன் கிளை/வட்டார/மாவட்ட/மாநில/தேசிய நிர்வாகிகளாக பொறுப்பு வகிக்கலாம்.**

## இதன் நோக்கம்:

**வருங்கால சந்ததியினர், இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள், தொழில்துறையினர், தொழில் மற்றும் அரசு துறைகளில் பணிசெய்வோர் என அனைத்து தரப்பு மக்களும் தங்களால் இயன்ற சேவையை சமுதாயத்திற்காக ஆற்றவேண்டும் என்ற உன்னத கோட்பாட்டை அவர்கள் மத்தியில் விதைப்பது. அன்னை தெரசா அவர்கள் சமுதாயத்தில் விட்டுச்சென்ற, "அன்பு", "சேவை" இரண்டையும் மக்கள், மத்தியில் பரப்புதல், மற்றும் நாட்டில் அனைவரும் அனைத்தும் பெற்று, இருப்பவர்கள் இல்லாதோருக்கு உதவி அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அன்பு பெருகி, அராஜகம், தீவிரவாதம்**

அடியோடு ஒழிந்து சுபிட்ச நிலை ஏற்பட பாடுபட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## கல்வி மேம்பாடு:

ஏழ்மையை ஒழிப்பதில் கல்வி மிகுந்த பங்கு வகிக்கிறது. மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் நாட்டில் கல்வி அறிவை வளர்ப்பதில் மிகுந்த அக்கரை காட்டுகிறது. நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் கல்வி அறிவு பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள், நோட்டுகள், புத்தகப்பை, துணிகள், மற்றும் பள்ளி உபகரணங்களை வழங்கி கல்வியை ஊக்கப்படுத்துவதோடு, மட்டுமின்றி, இலவச டியூசன் சென்டர்கள் அமைத்து வருவது நமது அறக்கட்டளையின் செயல்பாடாக இருந்து வருகிறது.

## தொழில் முனைவோர் பயிற்சி: (Skill Development)

வருகிற 2020-ம் ஆண்டுக்குள் இந்திய நாட்டின் மக்கள் தொகை 130 கோடியை தாண்டும். இதில் 60% மக்கள் 15 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பவர்கள். ஆனால் சுமார் 10% மக்கள் மட்டும் தான் முழுமையான தொழிற்பயிற்சிகள் பெறுகின்றனர். இதனை கருத்தில் கொண்டுதான் நமது நிறுவனம் தொழில் முனைவோர் பயிற்சிக்கு ஊக்கம் தந்து கொண்டிருக்கிறது.

கைவினை பொருள்கள் பயிற்சி, தையல்பயிற்சி, கம்பியூட்டர் பயிற்சி, உணவுபதப்படுத்துதல் பயிற்சி போன்ற பலவிதமான பயிற்சிகளை நூற்றுக்கணக்கான பெண்களும், இளைஞர்களும் பெற்று பயனடைந்துள்ளார்கள். இப்பயிற்சிகள் நம் நிறுவனம் நேரடியாகவும், மத்திய அரசுடன் இணைந்தும் நடத்தப்பட்டன. தற்போதும் இப்பயிற்சிகள் தமிழகத்தின் தருமபுரி, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, மதுரை, காஞ்சிபுரம், திருவள்ளுர், போன்ற மாவட்டங்களிலும், ஆந்திரா, மகாராஷ்டிரா, புதுச்சேரி, டில்லி போன்ற மாநிலங்களிலும் தொடர்ந்து நடைப்பெற்று வருகின்றது.

## மருத்துவ மேம்பாடு:

நகர்ப்புறங்களில் கிடைக்கும் மருத்துவ வசதிகள் இன்று கிராமபுறங்களில் கிடைப்பது அரிதாக உள்ளது. மத்திய, மாநில அரசுகளில் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தாலும் அவை கிராமப்புறங்களில் சென்று சேர்வது கடினமாக இருக்கிறது. மேலும், நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதிகளில் வசிக்கும் மக்கள், பல்வேறு சுகாதார சீர்கேடுகளை அனுபவித்து வருகிறார்கள். இதனைக்கருத்தில் கொண்டு நமது தன்னார்வ தொண்டர்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், பல்சிகிச்சை முகாம்கள், கண் சிகிச்சை முகாம்கள், பொதுமருத்துவ பரிசோதனை முகாம்கள் போன்ற பயனுள்ள முகாம்கள் நடத்தி வருகிறார்கள். அண்மையில், உலக சுகாதார நிறுவனத்துடன் (World Health Organization) இணைந்து “புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம்”, அரசு ஊழியர்கள் பொதுமக்கள்,

மாணவர்கள், சமூக ஆர்வலர்களுக்கு, அந்தமான் நிக்கோபார் தீவுகள், புதுச்சேரி, காரைக்கால் போன்ற பகுதிகளில் நடத்தப்பட்டது.

## சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை:

மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் மற்றும் அதன் துணை அமைப்பான அன்னை தெரசா பேரவை, சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற தூய்மைக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு மரம்நடும் நிகழ்ச்சிகள், தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சுத்தமான குடிநீர், சுகாதாரம் பேணுதல், பள்ளி, கல்லூரிகளில் மாணவர்களிடையே கருத்தரங்குகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு அவ்வப்போது நடத்தப்பட்டு வருகிறது. பிரதமரின் தூய்மை இந்தியா திட்டம், யோகா வகுப்புகள் மற்றும் பல்வேறு நலத்திட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

## இலவச ஆம்புலன்ஸ் சேவை:

அமெரிக்கா வாழ் இந்தியரான திருமிகு.எஸ்.பி.சிங் அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய ஆம்புலன்ஸ் தொடர்ந்து சென்னை மக்களுக்கு பல ஆண்டுகள் சேவை செய்து வந்தது. தற்போது அது சி.எஸ்.ஐ நெய்யூர் மருத்துவமனையோடு (கன்னியாகுமரி மாவட்டம்) இணைந்து நடமாடும் புற்றுநோய் கண்டுபிடிப்பு மையமாக இயங்கி வருகிறது.

## இரத்த நன்கொடையாளர் குழுமம் (MTCT Blood Donors Guild)

**"MTCT Blood Donors Guild"** என்ற இரத்ததான குழுமத்தை ஏற்படுத்தி, அதில் இந்தியாவில் எந்த பகுதியில் வசிப்பவரும் இணைந்து இரத்தம் தேவைப்படுவோருக்கு அந்தந்த பகுதிகளில் இலவசமாக இரத்த நன்கொடை வழங்க ஏதுவாக எற்படுத்தப்பட்ட சேவை. இதன் மூலம் நமது இணையதளம் **www.mtct.info, or www.motherteresacharities.org**-ல் (உள்புகுந்து) இரத்ததானம் செய்வோர் (இந்தியா முழுவதும்) அதில் பதிவு செய்வர். பொதுமக்கள் தங்கள் பகுதி இரத்ததானம் செய்யும் கொடையாளர்களை தொடர்பு கொண்டு இலவசமாக இரத்தம் பெற்றுக்கொள்ளலாம். இது இந்தியா முழுவதும் மாவட்டம், மாநிலம் வாரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சமுதாய விழிப்புணர்வு:

அன்னை தெரசா சமுதாயத்திற்கு விட்டுச்சென்ற "அன்பு", சேவை" ஆகியவை மக்கள் மத்தியில் மலர்ந்திட நமது நிறுவனம் உரிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. எனவே, இருப்போர் இல்லாதவர்களுக்கு தங்களால் இயன்றதை செய்ய தூண்டுகின்ற ஒரு அமைப்பாக இந்நிறுவனம் செயலாற்றி வருகிறது. இதற்காக மக்கள் நலன் சார்ந்த ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்தும் விதமாக, பல்வேறு அரசு, மற்றும் தொழில்துறை நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நலத்திட்டங்களை, கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள், குடிசை பகுதிகள் என கண்டறிந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## அன்னை தெரசா ஆட்டோ ஓட்டுநர் நலச்சங்கம்:

இந்த அமைப்பு நமது நிறுவனத்தின் ஒரு துணை அமைப்பாகும். தமிழகம் தழுவிய இந்த அமைப்பில், ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர். பொது மக்களுடன் சுமூகமான நல்லுறவை பேணிக்காப்பதும், ஆட்டோ, டாக்சி ஓட்டுநர்களின் நலன், அவர்கள் குடும்ப நலன், ஆகியவை காப்பதும் இதன் நோக்கமாகும்.

## நலன் தரும் செயல்திட்டங்கள்:

மேலும் கீழ்க்கண்ட மக்கள் நலன் பயக்கும் நல்ல திட்டங்களை இலக்காக வைத்து நமது நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

● ஏழைகளுக்கு வீடுகள், ● இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுவோர் நிவாரணம் ● மகளிர் மேம்பாடு ஊனமுற்றவர் நலன் ● கல்வி மேம்பாடு ● சுயவேலைவாய்ப்பு தொழில் முனைவோர் பயிற்சி ● மனித உரிமை மீறல்களுக்கு எதிரான பயிற்சிகள், செயல்பாடுகள் ● நோய்வாய்பட்டவர்களுக்கு உதவி ● கைவினைப்பொருட்கள் பயிற்சிமுகாம் ● சுயதொழில்மூலம் வருவாய் உருவாக்கும் பயிற்சிகள் ● சுயநிதி குழுக்கள் ● சிறுகுறு வியாபாரிகளுக்கு உதவுதல் ● விவசாயம் ஊக்குவித்தல் ● பள்ளி கட்டிடங்கள் பழுதுபார்த்தல், உதவுதல், ● அனாதை ஆதரவு திட்டங்கள் ● இலவச உணவு, உடை திட்டங்கள் ● பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ● சட்ட உதவிகள் ● விளையாட்டு போட்டிகள் நடத்துதல், அதனை ஊக்குவித்தல் ● சுற்றுச்சூழல் மற்றும் மரம் நடுதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மற்றும் பல.

## CSR செயல்திட்டங்கள்:

மத்திய அரசு அறிவித்துள்ள (**Corporate Social Responsibility**) திட்டங்களின் கீழ், ரூ.5கோடிக்கு அதிகமாக லாபம் ஈட்டும் அனைத்து தொழில் நிறுவனங்களும் தங்கள் வருவாயில் 2% சமூக மேம்பாடுக்காக செலவிட வேண்டும். மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட், இவ்வாறு செயல்படும் பெரிய நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஒரு கை நீட்டி நீ உதவி செய்தால்
இருகைகள் உன்னை வணங்கிடும்

- அன்னை தெரசா -

**மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்**
43, N.M ரோடு, சூளைமேடு, சென்னை - 600 094
Ph: 044-23743883,23742699, Email:mtct1997@gmail.com,mtct1997@yahoo.co.in
Web:motherteresacharities.org,www.mtct.info